# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 306/மா/2023**
**நாள் : 24.11.2023**

திரு. மு. ரவிசங்கர்,
சென்னை– 28. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–9, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மந்தைவெளிபாக்கம், பாரதிநகர், எண்.23 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. ரவிசங்கர் என்பவரின் 14.09.2023 நாளிட்ட மனு 20.09.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 306/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, மந்தைவெளிபாக்கம், பாரதிநகர், எண்.23 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. ரவிசங்கர் என்பவரின் 14.09.2023 நாளிட்ட மனுவில்,

பெருநகர சென்னை மாநகராட்சி மயிலாப்பூர் மண்டலம் 9 பகுதி 25 உட்பட்ட அனைத்து வார்டுகள் 121, 122, 123, 124, 125, 126 ஆகிய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீட்டில் வளர்க்கும் பசு மாடுகள் சாலையில் கேட்பாரற்ற நிலையில் அனாதையாக திரிகிறது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மின்கம்பங்களில் கட்டிட ஓரங்களில் மாடுகளை கட்டுவதால் மாடுகளின் கழிவுகள் சாலையில் படர்வதால் அதிகளவில் ஈக்கள் மொய்த்து தொற்று நோய் வருவதற்கு அபாயமாக உள்ளது.

மேலும் மாடு வளர்ப்பவர்கள் வீட்டில் வளர்க்காமல் ரோட்டில் விடுவதால் இருசக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள் சாலையில் கடக்கும் பொழுது மாடுகளால் சாலை விபத்துக்கள் ஏற்பட்டு கை கால் முறிந்து சில நேரங்களில் மரணம் ஏற்பட்டு விடுகிறது.

எனவே, இதனை கண்காணித்து மாடுகளை சிறைபிடிக்க பொறுப்புள்ள மண்டல சுகாதார அலுவலர் அவர்கள், சுகாதார அலுவலர், சுகாதார ஆய்வாளர், உயர்திரு கால்நடை மருத்துவர் மாடுகளைப் பிடிக்கும் கண்காணிப்பாளர் ஆகியோர் கண்காணித்து சாலையில் திரியும் மாடுகளை பிடிக்க பணிவுடன் வேண்டுகிறேன்.

இன்று 25.03.2022 ஆண்டிலிருந்து எவரேனும் பொதுமக்கள் வாகன ஓட்டிகள் மாடுகளால் இடையூறு ஏற்பட்டு கொம்பு முட்டி சாலை விபத்தில் இறந்து போனால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல உதவி ஆணையர் அவர்கள், மண்டல சுகாதார அலுவலர் அவர்கள், சுகாதார அலுவலர் & ஆய்வாளர் அவர்களின் சம்பளத்திலிருந்து இறந்து வாடும் குடும்பத்திற்கு நஷ்ட ஈடாக ஒரு கோடி ரூபாய் கொடுக்க கோரிக்கை வைக்கிறேன்.

மென்மேலும் தவறான நோக்கத்துடன் மாடு வளர்ப்பவர்களின் தவறுக்கு துணை போக நினைக்கும் அல்லது தவறுக்கு துணை நிற்கும் மாமன்ற உறுப்பினர்கள் எவரேனும் சிபாரிசு செய்தால் அவர்களது சொத்தை விற்று மாடுகளால் சாலை விபத்தில் இறந்துவாடும் குடும்பத்திற்கு நிரந்தரமான ஜீவனாம்சம் கொடுக்க வலியுறுத்துகிறேன் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலையில் திரியும் மாடுகளைப் பிடிக்க மற்றும் மின்கம்பங்களில் கட்டி வைத்துள்ள மாடுகளையும் பிடிக்க நடவடிக்கை தேவை. மாடு பிடிக்கும் வண்டிகளில் ஏற்றி கெட்டில் பவுட்ரியில் அனுப்பிவைக்க வேண்டுகிறேன். அதிக படியான அபராத தொகையை வசூலிக்க வேண்டுகிறேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 16.10.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. மண்டல அலுவலரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.**

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 16.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 21.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

> ''பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ல் உள்ள அனைத்து வார்டுகளிலும் வீடுகளில் வளர்க்கும் பசுமாடுகள் சாலையில் தாறுமாறாக திரிகின்றன. மேலும் அங்குள்ள மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள தெருவிளக்கு மின்கம்பங்களிலும், கட்டடத்தின் ஓரங்களிலும் அங்குள்ள மாடுகள் கட்டப்படுவதால் மாட்டு சாணம், தெரு முழுவதும் பரவி தொற்று பரவுவதற்கும், மழைக்காலங்களில் பொதுமக்கள் மற்றும் சிறார்கள் வழுக்கி விழுவதற்கும் வாய்ப்பு உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ல் அமைந்துள்ள 600 சதுர அடி இடமேயுள்ள இடத்தில் சுமார் 30 மாடுகள் கட்டப்பட்டுள்ளது. மேலும் மாடுகள் சாலையில் திரிவதால், சாலையை கடக்கும் வாகனங்கள் விபத்திற்குள்ளாகி வாகன ஓட்டிகள் காயமடைகின்றனர்.
>
> எனவே மேற்கண்ட பகுதியில் சுற்றித் திரியும் மாடுகளை கண்காணித்து, அதனை மாநகராட்சி அலுவலர்களால் சிறைபிடிக்க ஆவன செய்திடவும், மாடுகள் முட்டி காயமடையும் மற்றும் இறப்பவர்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்கிடவும் மாநகராட்சியால் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல சுகாதார அலுவலர் 21.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.**

> "பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–9ல் சுற்றித் திரியும் மாடுகளை காலை மற்றும் மாலை நேரங்களில் கண்காணித்திடவும் மேலும் திடீர் சோதனைகள் மேற்கொண்டு அவைகளை பிடித்து கொட்டகையில் அடைத்திடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு

வருகின்றன. அவ்வாறு பிடிக்கப்படும் மாடுகள் சென்னை புதுப்பேட்டை மற்றும் பெரம்பூரில் உள்ள கொட்டகையில் அடைக்கப்பட்டு, மாட்டின் உரிமையாளர்கள் அவற்றை விடுவித்திட கோரும்போது அவைகளை விடுவித்து அதற்கான அபராதத் தொகையும் வசூலிக்கப்படுகின்றன என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்து, இந்நேர்வு தொடர்பான எனது 21.11.2023 நாளிட்ட எழுத்துபூர்வ வாக்குமூலத்தையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9ன் சுகாதார அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9ல் உள்ள அனைத்து வார்டுகளிலும் வீடுகளில் வளர்க்கப்படும் பசு மாடுகள் சாலையில் திரிகிறது என்றும், மின்கம்பங்களிலும், கட்டட ஓரங்களிலும் மாடுகளை கட்டுவதால் மாட்டின் கழிவுகள் சாலையில் பரவி இருப்பதால், அதிகளவில் ஈக்கள் மொய்த்து தொற்று நோய் வருவதற்கு வாய்ப்பு உள்ளது என்றும், சுற்றித்திரியும் மாடுகளால் இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கு விபத்து ஏற்படுகிறது என்றும், அதனால் மண்டல சுகாதார அலுவலர், சுகாதார ஆய்வாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோர் சாலையில் திரியும் மாடுகளை பிடித்து அதற்கான தொழுவத்தில் விடுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9இல் சுற்றித் திரியும் மாடுகளை, காலை மற்றும் மாலை நேரங்களில் கண்காணித்திடவும், திடீர் சோதனை மூலம் பிடிக்கப்படும் மாடுகளை புதுப்பேட்டை மற்றும் பெரம்பூரில் உள்ள கொட்டகையில் அடைத்திடவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், மாட்டின் உரிமையாளர்கள் மாடுகளை கோரும்போது அதற்கான அபராதத் தொகை வசூலித்த பின்னர் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படுவதாகவும் மேலும், மண்டலம்-9ல் கடந்த ஜனவரி 2023 முதல் அக்டோபர் வரை தெருக்களில் சுற்றித்திரியும் 340 கால்நடைகள் பிடிக்கப்பட்டு அடைக்கப்பட்டுள்ளது என்றும் சென்னை மாநகராட்சி மண்டலம்-9ன் மண்டல சுகாதார அலுவலர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட சாலைகளில் மாடுகள் சுதந்திரமாக சுற்றித் திரிவதும், அவற்றினால் பள்ளி மாணவ/மாணவியர்கள் மற்றும் வயதானவர்கள் தாக்கப்படுவதும் பத்திரிக்கைகளில் செய்திகள் வந்த வண்ணம் உள்ளது. இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் தகுந்த உத்திரவு பிறப்பித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

Tamil Nadu Local Bodies Act, 2023, பிரிவு 106 இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது,

**<u>Impounding of stray animals:</u>**

(1) No person shall milk or cause or permit to be milked any cow or buffalo of other animal in any public street or place.

(2) No person shall allow any animal to be strayed in any public street or public place.

(3) Notwithstanding anything contained in any other law for the time being in force the Commissioner may cause to remove and impound any animal being milked or any animal found straying in any public street or other public place in accordance with such rule as may be prescribed.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதாரத் துறையின் கள அலுவலர்கள் சுற்றித்திரியும் மாடுகளை பிடித்திட மேற்குறிப்பிட்டுள்ள சட்டப் பிரிவின்படி இன்னும் மிக தீவிர நடவடிக்கை எடுத்து பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் குறிப்பாக வயதானவர்கள் பாதுகாப்பாக சாலைகளில் நடமாட உறுதிசெய்ய வேண்டும் என்று பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் நாளுக்குநாள் சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளால் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் பொதுமக்கள் குறிப்பாக வயதானவர்கள், பள்ளி மாணவ மாணவியர்கள் தாக்கப்படுவதை தடுக்கும் வகையில் சமூக ஆர்வலர்கள் மற்றும் மாடு வளர்ப்போர் ஆகியோரின் கருத்தினைப் பெற்று, நிரந்தரமாக ஒரு திட்டத்தை உருவாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆலோசனை வழங்கி ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. மு. ரவிசங்கர்,
23, பாரதி நகர், மந்தவெளிபாக்கம்,
சென்னை – 600 028.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் (ம) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
மண்டலம் - 9, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.4, 4வது குறுக்குத் தெரு,
லேக் வியூ ரோடு,
சென்னை – 600 034.
4. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்